ASL 1085

1085

<u>சுருக்கம்</u>

சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை – தொல்லியல் – விதி 110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு 2021–2022 – திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர்புரம் கிராமம், மேலப்பாளையம் நகரத்தில் பொருநை அருங்காட்சியகம் அமைத்தல் – ரூ.33.02 கோடிக்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அதொ–2) துறை</u>

அரசாணை (நிலை) எண்.212

நாள் 29.08.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது, ஆவணி 13

படிக்கப்பட்டவை:

1. திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை எண். 4/28619/2021, நாள் 3.11.2021
2. தொல்லியல் துறை இயக்குநரின் (மு.கூ.பொ.) கடித எண்.இ3/ 4566/ 2021, நாள் 23.3.2022.

*********

<u>ஆணை:</u>

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 09.09.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி 110–ன் கீழ் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

> "ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் போது கிடைத்த அரிய பொருட்களை அழகுறக் காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளோடு பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்படும்".

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணையின்படி, "பொருநை அருங்காட்சியகம்" அமைப்பதற்கு, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர்புரம் கிராமம், மேலப்பாளையம் நகரம், வார்டு BP பிளாக் 40, நகரளவை எண்.1 (பழைய எண் 1097) விஸ்தீரணம் 20.78.00 ஹெக்டேர் (51.34 ஏக்கர்) கல்லாங்குத்து புறம்போக்கு நிலத்தில் 5.27.68 ஹெக்டேர் (13.02 ஏக்கர்) நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தொல்லியல் துறை இயக்குநர்(மு.கூ.பொ.) அவர்கள், ஆதிச்சநல்லூர், கொற்கை மற்றும் சிவகளையில் தற்போது மூன்றாம் கட்ட அகழாய்வுப் பணிகள் தொல்லியல்

Scanned by TapScanner

துறையின் மூலம் நடைபெற்று வருகின்றன எனவும், தற்போதைய ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சியானது நீண்டகால கேள்விக்கு விடையளிக்கும் வகையில் பழங்கால வாழ்விடங்களைத் தொல்லியல் சான்றுகளின் மூலம் அடையாளப்படுத்தியுள்ளது எனவும், அண்மையில் கொற்கை அகழாய்வில் கி.மு.5ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கங்கைச் சமவெளியைச் சார்ந்த கருப்பு வண்ணப்பூச்சு பெற்ற (Black Slipped ware of Gangetic valley) பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன எனவும், சிவகளை முதற்கட்ட அகழ்வாய்வில் கிடைக்கப் பெற்ற 'ஆதன்' என்ற தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடு, கருப்பு-சிவப்பு வண்ணக் கலயங்கள், குடுவைகள், பானை மூடிகள் போன்றவற்றில் அழகிய வடிவமைப்பில் வரையப் பெற்றுள்ள வெள்ளை வண்ண வேலைப்பாடுகளை நோக்கும் போது சிவகளைப் பகுதியில் வாழ்ந்த தமிழ்ச் சமூகம் மிகப் பழமையானதாகக் கருதப்படுகிறது எனவும் மேலும், இந்த அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட நெல்லினை கரிமப் பகுப்பாய்வு செய்ததில் இதனின் காலம் கி.மு. 1155 என காலவரையறை செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், தொல்லியல் துறை இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110-ன் கீழ், வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக, தமிழ்நாட்டின் பண்டைய காலத்தில் சிறந்தோங்கி விளங்கிய ஆற்றங்கரை நாகரீகங்களில் ஒன்றான பொருநை ஆற்றங்கரை நாகரீகத்தின் பெருமையை வெளிப்படுத்தும் முகமாக உலகத்தரம் வாய்ந்த "பொருநை ஆற்றங்கரை நாகரீக அகழ்வைப்பகம்" அமைப்பதற்கு, கீழ்க்காணும் விரிவான திட்ட மதிப்பீட்டின்படி, ரூ.33.02 கோடிக்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| PROPOSED ARCHAEOLOGICAL HERITAGE MUSEUM-PORUNAI SUMMARY | | |
|---|---|---|
| Sl No. | Description of Work | Amount (Rs.) |
| 1. | Construction of museum complex complete with galleries, toilets, admin areas, reserve collection space, refreshment kiosk, souvenir shop etc., | 16,07,52,897.87 |
| 2. | MEP Services | 7,53,78,268.98 |
| 3. | Provision of display arrangements for the museum along with signage etc | 2,75,00,000.00 |
| 4. | Landscaping and Pathways, battery car routes etc., | 1,74,45,000.00 |
| | Sub Total | 28,10,76,166.85 |
| 5. | ADD GST @ 12% | 3,37,29,140.02 |
| | Sub Total | 31,48,05,306.87 |
| 6. | Ps charges and supervision charges @3% (Sub Total) | 84,32,285.01 |
| 7. | Labour Welfare @1% | 28,10,761.67 |
| | NETT TOTAL | 32,60,48,353.55 |
| 8. | Consultancy charges for the preparation of DPR exclusive of GST @ | 35,13,452.09 |

Scanned by TapScanner

| | | |
|---|---|---|
| | 1.25% of Project cost | |
| 9. | GST at 18% for consultancy | 6,32,421.38 |
| 10. | GRAND TOTAL | 33,01,94,227.02 |
| | SAY | 33.02 CR |
| RUPEES THIRTY THREE CRORES AND TWO LAKHS ONLY | | |

5. மேற்படி கருத்துரு தொடர்பாக, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ், 13.06.2022 அன்று நடைபெற்ற மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் மேம்பாட்டுக் குழுக் கூட்டத்தில், (State Infrastructure And Amenities Promotion Committee Meeting) மேற்படி, பொருநை அருங்காட்சியகம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள ரூ.33.02 கோடியில் ரூ.18 கோடியினை, Infrastructure And Amenities Fund–ன் கீழ், ஒதுக்கீடு செய்வதற்கு குழு ஒப்புதல் அளித்துள்ளது.

6. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 2021–2022 ஆம் நிதியாண்டில் விதி 110–ன் கீழ், வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக, தொல்லியல் துறை இயக்குநர்(மு.கூ.பொ.) அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று, ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் போது கண்டெடுக்கப்பட்ட அரிய பொருட்களை அழகுறக் காட்சிப்படுத்திட திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், குலவணிகர்புரம் கிராமம் மேலப்பாளையம் நகரம், வார்டு BP பிளாக் 40, நகரளவை எண்.1 (பழைய எண் 1097) விஸ்தீரணம் 20.78.00 ஹெக்டேர் (51.34 ஏக்கர்) கல்லாங்குத்து புறம்போக்கு நிலத்தில் 2 என்ற புதிய உட்பிரிவில் பகுதி விஸ்தீரணம் 5.27.68 ஹெக்டேர் (13.02 ஏக்கர்) நிலப்பரப்பில் தொல்லியல் துறையின் மூலம் பொருநை அருங்காட்சியகம் அமைப்பதற்கு மேலே பத்தி 4–ல் உள்ள திட்டமதிப்பீட்டின்படி, ரூ.33.02 கோடியில், ரூ.15.02 கோடியினை வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்தும், ரூ.18.00 கோடியினை மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதியிலிருந்தும் (ரூபாய் முப்பத்து மூன்று கோடியே இரண்டு இலட்சம் மட்டும்) மேற்கொள்ள நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது.

7. (அ) மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

| | | |
|---|---|---|
| 4202 | : | கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு |
| 04 | : | கலையும் பண்பாடும் |
| 106 | : | அருங்காட்சியகங்கள் – மாநிலச் செலவினங்கள் |
| KC | : | அகழ்வாராய்ச்சிப் பணியில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை காட்சிப்படுத்திட புதிய அகழ்வைப்பகம் அமைத்தல் |
| 416 | : | பெரும் பணிகள் |
| 01 | : | பெரும் பணிகள் |
| IFHRMS | : | 4202 04 106 KC 416 01 |

– 15.02 கோடி

Scanned by TapScanner

(ஆ) 4202 கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு – 04 கலையும் பண்பாடும் – 106 அருங்காட்சியகங்கள் – மாநிலச் செலவினங்கள் KE மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியின் கீழ் அகழ்வாராய்ச்சிப் பணியில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை காட்சிப்படுத்திட புதிய அகழ்வைப்பகம் அமைத்தல் – 416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்
(த.தொ.கு: 4202 04 106 KE 41601) – ரூ.18.00 கோடி

8. மேலே பத்தி 6–ல் உள்ள உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு நிதியின் கீழ் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.18.00 கோடியினை கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் கழித்து நேர்செய்யப்பட வேண்டும்.

4202 கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு – 04 கலையும் பண்பாடும் – 902 கழிக்கவும்–காப்பு நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை AA மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதி நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை 430 01 – கணக்குகளிடையே மாற்றம்
(த.தொ.கு: 4202–04–902–AA 430 01) – ரூ.18.00 கோடி

இத்தொகை J சேமநிதிகள்(b) வட்டி பெறாத சேமநிதிகள் 8229.00 வளர்ச்சி நலநிதிகள் – 200 ஏனைய வளர்ச்சி நலநிதி – AZ மாநில உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி 802 – வழங்குதல் – 02 – வட்டி பெறாதவை
(த.தொ.கு: 8229 00 200 AZ 802 02).

என்ற கணக்குத் தலைப்பின் கீழ் எதிர் பற்று வைக்கப்பட வேண்டும்.

9. மேலே பத்தி 6–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள ,செலவினம் ஒரு "புது துணைப் பணி (NEW INSTRUMENT OF SERVICE) குறித்ததாகும்". துணை மதிப்பீடுகளில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதி(Contingency Fund) முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும். எதிர்பாரா செலவு முன்பணம் ஒப்பளிப்புக்கான ஆணைகள் நிதி (வரவு–செலவு/பொது–1)த் துறையில் தனியாக வெளியிடப்படும். உடனடி செலவுக்கான தொகையினை கணக்கிட்டு அதனை எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணமாக பெறுவதற்கு விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் இருபடிகளில் நிதி (வரவு–செலவு–பொது–I) துறைக்கு சமர்ப்பிக்குமாறு தொல்லியல் துறை இயக்குநர்(மு.கூ.பொ.) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2022–2023–ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கான கருத்துருவினை உரிய நேரத்தில் தவறாது நிதி (கல்வி–II/பொது–I) துறைக்கு அனுப்பிட தொல்லியல் துறை இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

Scanned by TapScanner

10. மேலே பத்தி 7(ஆ)–ல் துவக்கப்பட்டுள்ள புதிய கணக்குத் தலைப்பிற்கு இயக்குநர்(மு.கூ.பொ.), தொல்லியல் துறை அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

11. மேற்படி புதிய கணக்குத் தலைப்பை தங்களது பதிவேடுகளில் துவக்கிக் கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்/கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

12. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.41168/கல்வி–II/ 2022, நாள் 27.08.2022–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1085 (ஆயிரத்து எண்பத்து ஐந்து) (IFHRMS ASL NO.2022081085)

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன். B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்:–
இயக்குநர்(மு.கூ.பொ.), தொல்லியல் துறை, சென்னை – 8
மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மாவட்டம்,
சம்பள கணக்கு அலுவலர்,(தெற்கு) சென்னை – 35.
முதன்மை மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –18.
மாநில கணக்காய்வுத் தலைவர் (க&ப/தணிக்கை), சென்னை–18.
உள்ளுறை தணிக்கை அலுவலர் (பொது/சமூக பகுதி தணிக்கை) , சென்னை –9
<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, சென்னை–9.
இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, சென்னை – 107.
நிதி(கல்வி–II/வ.செ.பொது–II/வ.வ.மு–I)துறை, சென்னை–9.
சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Scanned by TapScanner